Really speaking this subject should be raised in the Parliament and not in the Assembly.

THIRU RAMA. ARANGANNAL: I want to make one submission.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சப்மிஷன் என்று ஒன்றும் கிடையாது.

திரு. இராம அரங்கண்ணல்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்தக் கேள்வி சபாநாயகர் அவர்கள் அனுமதித்து சட்டசபைக்கு வந்திருக்கிறது. நண்பர் திரு. விநாயகம் அவர்கள் கிளப்புகிற இந்தப் பிரச்சினை சபாநாயகர் அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று கிளப்புகிற பிரச்னைக்கு ஒப்பாகும். ஏனெனில் இந்தக் கேள்வி அனுப்பப்பட்டு தாங்கள் அனுமதித்த பிறகு இங்கு சட்ட சபைக்கு வந்திருக்கிறது. ஆகையால், அவர் இந்த ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்புவது ஒழுங்கல்ல என்று நான் கருதுகிறேன். இதுகுறித்து தங்கள் தீர்ப்பு வேண்டும்.

திரு. கே. பி. எஸ். மணி: பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்தச் சபைக்கு ஒரு ஒழுங்கு விதிக்கப்பட்டிருக்கிறது தங்கள் தலைமையில். சபாநாயகர் அவர்கள் பேசும்போது இந்த ஒழுங்கை மீறி அங்கத்தினர்கள் எழுந்து நிற்பதும், சபையில் ஒருவருக்கொருவர் விவாதத்தை நேரடியாக நடத்திக் கொள்ளுவதுமாக இருக்கிற முறை இந்தச் சபையின் கௌரவத்தைக் குறைக்கிறது. அதற்குப் பரிகாரம் தேட தங்களை வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று உறுப்பினர்களும் கூறியதுபற்றி நான் தெரிவிப்பது, ஏதோ நான் அவர்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தேனே தவிர, பேசிய அத்தனையும் விதிகளுக்கு முரண் என்று தெரிந்தே கேட்டுக் கொண்டிருந்தேன் என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பேரவையின் 40-வது விதியைப் படிக்கிறேன்—

No discusisons shall be permitted at question time in respect of any question.

அதாவது கேள்வி நேரத்தில் கேள்விகள் பற்றிய எந்தவிதமான விவாதமும் கூடாது. ஆகையால் அருள்கூர்ந்து அந்த விதிப்படி கேள்வி நேரத்தில் விவாதங்களை எழுப்ப வேண்டாமென்று கேட்டுக் கொண்டு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை விடை கூறும் படி கேட்டுக்கொள்கிறேன்.

1. வினாக்கள்-விடைகள் (தொடர்ச்சி)

தமிழக அரசு பற்றி தவறான பிரச்சாரம்

* **குறுகிய கால வினா எண் 4. திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக தி. மு. கழக அரசுபற்றி திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா கட்சியினர் தவறான பிரச்சாரம் செய்து வருவது தமிழக அரசுக்குத் தெரியுமா?

1967 ஜூன் 22]

(இ) ஆம் எனில், இலங்கையில் நடத்தப்படும் இந்தத் தவறான பிரச்சாரத்தைத் தடுக்க மத்திய அரசு மூலம், இலங்கை இந்திய தூதரகம் கேட்டுக் கொள்ளப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) திருமதி பண்டாரநாயகா பேசியதாகப் பத்திரிகையில் வெளிவந்த சில செய்திகளிலிருந்து திருமதி பண்டாரநாயகா ஏதோ ஒரு வகையான பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதாகத் தெரிகிறது. பத்திரிகை அறிவிப்புகள் வாயிலாக, முதலமைச்சர் இதற்கு மறுப்புகள் விடுத்துள்ளார்.

(இ) இதற்கான தேவை ஏதும் இப்போது எழவில்லை.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, இங்கு இருக்கிற இலங்கை ஹை கமிஷனர் ஆபீஸ் மூலமாகவாவது இந்த அரசாங்கத்தைப் பற்றி அங்கு தவறாகப் பிரச்சாரம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது இலங்கையிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் செய்து கொண்டு வருவதாகச் சொல்லப்படுகின்ற பிரசாரத்தைப் பற்றியது. இலங்கை அரசு அப்படிப்பட்ட பிரசாரத்தைச் செய்து வந்தால் ஹை கமிஷனர் மூலமாகத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசு கருதியிருக்கும்.

Dr. H. V. HANDE : Sir, what is the exact type of propaganda that has been indulged in by this Lady's Party?

The Hon. Thiru C. N. ANNADURAI : The usual kind of propaganda that any Party indulges in against another Party.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : இங்கே இருக்கிற அரசாங்கத்தைப் பற்றி இலங்கையில் ஒரு தவறான பிரசாரம் செய்யப்படுவதைக் கண்காணித்து அதற்குத் தக்க ஏற்பாட்டை மத்திய அரசு செய்யவேண்டும். காரணம் என்னவென்றால் விருதுநகர் தொகுதியைப் பொருத்தவரை அந்நியப் பணம் ஊடாடியதா இல்லையா என்பதைப் பற்றி நமக்கு எதும் கூறாது அவர்கள் கண்காணித்து வருகிறார்கள். அந்த முறையில் இந்த மாதிரி தவறான அபிப்பிராயம் இலங்கையில் பேசப்படுவதைத் தடுக்க, கண்காணிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுப்பது குறித்து இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் ஆசைத்தம்பி அவர்கள் தொடர்ந்து கேட்பதாலே நான் சொல்ல வேண்டாமென்று கருதியிருந்ததைச் சொல்ல வேண்டி வருகிறது. திருமதி பண்டார நாயகாவின் பிரசாரத்தைப் பற்றி இந்த அரசு பொருட்படுத்தவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மாதிரியான பிரசாரத்தைப்பற்றி மத்திய அரசுக்கு மாகாண அரசு கருத்துத் தெரிவித்தது உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறபடி அங்கு நடைபெறுகின்ற ஒரு எதிர்க்கட்சி யின் பிரசாரத்தின் மூலம் இந்த அரசாங்கத்திற்கு ஏதாவது கவலே ஏற்பட்டால் மத்திய அரசாங்கத்திடம் சொல்லலாம். ஆனுல், அப்போது கூடச் சொல்லியிருக்க வேண்டியதில்லே. இந்தியாவி னுடைய மொத்த அந்நிய நாட்டுக் கொள்கையைப் பற்றி அங்கே தவருகப் பேசப்பட்டிருந்தால்தான் நாம் . அவர்களிடத்தில் சொல்ல வேண்டியிருந்திருக்கும். இப்போது அதற்கு அவசிய மில்லே. இப்போது உள்ளபடியே அந்தப் பிரசாரம் பலன் அளிக் காததன் காரணமாக நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

திரு. க. ரா. நல்லசிவம் : இலங்கையில தமிழ் வம்சா வழியினர் லட்சக் கணக்கில் இருக்கிருர்கள். அவர்களே இங்கே வரவழைத்துக் கொள்வதற்காக இலங்கை அரசும் மத்திய அரசும் உடன்பாடு செய்துகொண்டு அது சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. இது போன்ற நிலேயில், தமிழர்கள் அதிகமாக அங்கே இருக்கின்ற நிலேயில் இன்றைக்கு அரசாங்கத்தில் பொறுப்பு ஏற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தைப் பற்றித் தவருன பிரசாரம் செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இங்கே உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற தமிழக அரசைப் பற்றி அதிகார பூர்வமான எல்லா நல்ல தகவல்களேயும் இலங்கை யில் இப்போதுள்ள அரசு நன்ருக அறிந்து இருக்கிறது. நாம் ஏதும் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லே.

திரு. எஸ். இராமச்சந்திரன்: இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் தமிழர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்காரை இந்த அரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இந்தக் கேள்வியின் தொடர்பாக இந்தத் துணைக் கேள்வி வரவில்லே என்ருலும் கனம் உறுப்பினருக்குள்ள ஆவலேப் போலவே பலருக்கும் ஆவல் இருப்ப தால், இதைப் பற்றி ஏற்கனவே மத்திய சர்க்காரிடம் முறை யீட்டைத் தெரிவித்திருக்கிருேம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: அடிக்கடி இலங்கை அரசாங்கம் தமிழர்களேப் பற்றியும் தமிழ் நாட்டிலுள்ள கட்சி களேப் பற்றியும் தவருன பிரசாரம் செய்கின்ற காரணத்தால் அங்கு ஒரு தமிழரை ஹை கமிஷனராகப் போடுவதன் மூலம் பரிகாரம் காண முடியும் என்ற காரணத்தால் முன்பே இது பற்றி நமது கட்சிகளின் சார்பாக எடுத்துக் கூறப்பட்டது. தற்போதைய அரசாங்கம் அதைப் பற்றி கவனித்து அதற்கான நடவடிக்கைகளே எடுக்குமா ?

1967 ஜூன் 22]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஏற்கனவே வேறு ஒரு உறுப்பினர் கேள்விக்கு இதைப் பற்றிப் பதில் அளித்தேன். இலங்கையிலே ஒரு தமிழரை ஹை கமிஷனராக நியமிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரிடத்திலே நம்முடைய முறையீட்டைத் தெரிவித்திருக்கிறோம். கனம் உறுப்பினருடைய கேள்வியின் முதற் பகுதியில் தமிழர்களைப் பற்றி, தமிழ் நாட்டைப் பற்றி இலங்கை அரசு தவறான பிரசாரம் செய்கிறது என்று குறிப்பிட்டார்கள். இலங்கையில் அதிகார பூர்வமாக உள்ள அரசு தமிழக அரசைப் பற்றி மிக மதிப்பான கருத்தை வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்கள்

* 44 **வினா.—திரு. கரு. சீமைச்சாமி** : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தேர்தல் சம்பந்தமாக மட்டும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், கட்சிவாரியாக?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :

திராவிட முன்னேற்றக் கழகத்தினர்	915
காங்கிரஸ்காரர்கள்	319
கம்யூனிஸ்டுகள் (இடதுசாரி)	28
திராவிடக் கழகத்தினர்	18
ஏனையோர்	84
மொத்தம்	1,364

திரு. கரு. சீமைச்சாமி: தேர்தல் சமயத்திலே சைதாப்பேட்டை தொகுதியிலே நடந்த கோட்டூர் சம்பவம் மதிப்பிற்குரிய அமைச்சர் கருணாநிதி அவர்களை வழி மறித்துக் கொலை செய்வதற்கு நடந்த முயற்சியாகும். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அது பற்றிய விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : திருமங்கலம் தேர்தல் நேரத்தில் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டபோது ஏற்பட்ட கலவரத்தில் கைது செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கையும் இதிலே சேர்ந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது மாநிலம் முழுவதற்குமான கணக்கு. ஜில்லாவாரியாகப் பார்த்து நம்முடைய ஜில்லாவில் எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டார்கள் என்று அறிந்து கொள்வதில் அங்கத்தினர்களுக்கு ஆவல் இருக்குமென்று கருதாததால் ஜில்லா வாரியான கணக்கு எடுக்கவில்லை.